**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண்.513/2023**

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ம் நாள் திங்கள் கிழமை PW1 இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 10.11.2025 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | ராஜேந்திரன் (PW1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது : | |

**<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் வாதியின் கணவர் ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்கு மூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 29.10.2021 தேதியிட்ட வாதி பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்டின் பதிவு நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 02.12.2022 தேதியிட்ட மாவட்ட ஆட்சியருக்கு வாதி கொடுத்த மனு நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 07.12.2022 தேதியிட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து வாதிக்கு வந்த கடித்தின் அசல் வா.சா.ஆ.3 ஆகவும், 10.02.2023 தேதியிட்ட 2 ஆம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.4, 02.03.2023 தேதியிட்ட பதில் அறிவிப்பு வா.சா.ஆ.5, 17.03.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.6, முதல் பிரதிவாதியால் திருப்பி அனுப்பப்பட்ட அஞ்சல் உறை வா.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.